புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

================================================================================

**சுப்ரபாரதிமணியன் பார்வையில் திருப்பூர் நகரம்**

================================================================================

**ஆய்வாளர்**
ஜெ. சிவகாமிசுந்தரி
(முனைவர்பட்;ட ஆய்வாளர்)
தமிழாய்வுத்துறை பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சி - 620 017.

**நெறியாளர்,**
முனைவர் வீ. மீனாட்சி,
தமிழாய்வுத்துறை பிஷப் ஹீபர் கல்லூரி,
திருச்சி - 620 017.

================================================================================

**ஆய்வுச் சுருக்கம்**

சுப்ரபாரதிமணியன் பல நாடுகளுக்குச் சென்று தன் அனுபவங்களை படைப்புகளாக தந்துள்ளார். இதில் தான் பிறந்த மாவட்டமான திருப்பூர் நகரை மையமிட்டு அவரது படைப்புகள் அமைந்துள்ளன. இவரது படைப்புகளில் பனியன் நிறுவனங்களில் பெண்களுக்கு பாதுகாப்பின்மை, ஊதிய குறைவு, சுமங்கலி திட்டத்தின் மூலம் பெண்களின் உழைப்பை சுரண்டுதல் போன்ற செயல்கள் நடைபெறுவதை சுப்ரபாரதிமணியன் தன் பெரும்பாலான படைப்புகளில் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும் குழந்தைகளை குறைந்த கூலிக்கு பணிக்கு அமர்த்துதல் போன்ற செயல்களும் நடைபெறுவதாக கூறுகிறார். புலம்பெயர் தொழிலாளர்கள் இத்தகைய பனியன் நிறுவன்களை நம்பி பணிக்கு வரும்பொழுது அடிப்படை வசதிகளான உணவு, இருப்பிடம் சார்ந்த சிக்கல்களை சந்திக்க நேருவதாக சுப்ரபாரதிமணியன் குறிப்பிடுகிறார். மேலும் நெசவுத்தொழில் பெருகியுள்ள

நிலையில், பனியன் நிறுவனங்களின் வருகையால் நெசவாளர்களின் வாழ்ககையில் வறுமை நிலவுவதாக குறிப்பிடுகிறார் நொய்யல் ஆறு பனியன் நிறுவனங்களின் பெருக்கத்தால் சாயக் கழிவுகள் கலந்து மாசு ஏற்பட்டுள்ளதாக கூறுகிறார். இதன் மூலம் குடிநீர் பற்றாக்குறை நிலத்தடி நீர் மாசு ஏற்படுதல், தோல் நோய் ஏற்படுவதாக தமது படைப்புகளின் வழி உணர்த்துகிறார். இவற்றைப் பற்றிய சுப்ரபாரதிமணியனின் பதிவுகள் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளன.

**முன்னுரை**

திருப்பூர் என்ற பெயருக்கு நிறைய வரலாறுகள் உள்ளன. இதில் ஒரு சான்றாக சோழன் செங்கண்ணனுக்கும் சேரன் கணைக்கால் இரும்பொறைக்கும் இங்கு போர் நடந்தது, இரும்பொறை மிகப்பெரிய வீரனாக இருந்தாலும் அந்தப்போரில் சோழன் வெற்றிபெற்றான். சேரனை சிறைப்பிடித்தான் யுத்த தர்மப்படி கைதுசெய்யப்படும் மன்னனுக்குச் சில மரியாதைகள் தரப்படவேண்டும். ஆனால் இரும்பொறையைச் சிறையில் அவமதிக்கிறார்கள். மானமே பெரிது என நினைத்த அவன் உண்ணாமல் உறங்காமல் தன்னையே வருத்திக் கொண்டு உயிர் துறக்கிறான். மானத்ததுக்காக சேரன் உயிர்விட்ட பெருமைமிகு இடம் என்பதால் இவ்வூரை, ‘திரு’ப்போர் என்று அழைத்தனர். அந்ததிருப்போர் தான் மருவி திருப்பூர் ஆகிவிட்டது. திருப்பூர் நகரம் திருப்பூர் மாவட்ட நிர்வாக தலைமையகமாகவும், தமிழ்நாட்டின் ஐந்தாவது பெரிய நகர்ப்புர அமைப்பாகவும் உள்ளது. நொய்யல் ஆற்றின் கரையில் அமைந்திருக்கும் இது பல்வேறு காலங்களிலும் பல்வேறு மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டது. தென்னிந்திய தீபகற்பத்தின் மையத்தில் அமைந்துள்ளது. திருப்பூர் நகரம் 2008 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட முனிசிபல் கார்ப்பரேட்டினால் நிர்வகிக்கப்படுகிறது. இத்தகைய திருப்பூரில் பனியன் நிறுவனங்களின் வருகையினால் ஏற்படும் சிக்கல்களை சுப்ரபாரதிமணியனின் படைப்புகளின் வழி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**பனியன் நிறுவனங்கள்**

திருப்பூருக்கு காந்தி ஐந்து முறை வருகைதந்து உள்ளார். திருப்பூரைச் சுற்றி பருத்தி விளைச்சலினால் நெசவுத்தொழில் சிறந்து விளங்கியது. அந்நியத் துணிகளைப் புறக்கணித்த காந்தி, திருப்பூருக்கு அருகில் இருக்கும்; இடுவாய், இடுவம்பாளையம் ஆகிய நெசவாளர் கிராமங்களுக்கு வந்து தங்கி இருக்கிறார். காந்தி இறந்த பிறகு அவருடைய அஸ்தி பல்வேறு ஊர்களில் வைக்கப்பட்டது. அவற்றில் ஒன்று திருப்பூர். அந்த இடம்தான் இன்று காந்திநகர். கடந்த 78-79 களில் திருப்பூரில் பனியன் நிறுவனங்கள் வந்தபிறகு மக்களின்

வாழ்க்கைத்தரத்தில் மாற்றம் ஏற்பட்டது. வந்தாரை வாழவைக்கும் ஊராக மாறியது திருப்பூர். இதனால்,‘ திருப்பூர் 100 ரூபாய் கீழே விழுந்துவிட்டால் குனிந்து எடுக்கமாட்டார்கள். அதை எடுத்து நிமிர்வதற்குள் 200 ரூபாய் சம்பாதித்துவிடலாம்...’என்று சொல்வார்கள். அத்தகைய பெருமை மிகுந்த ஊரில் பிறந்தவர் தான் சுப்ரபாரதிமணியன் அவர்கள்.

**சுப்ரபாரதிமணியன் அறிமுகம்**

சுப்ரபாரதிமணியன் அவர்களின் இயற்பெயர் சுப்ரமணியன். பாரதியார் மீது கொண்ட பற்றால் தம்பெயரின் இடையே பாரதியை இணைத்துக்; கொண்டார். இவர் 20-07-1956 ஆம் ஆண்டு கோவை மாவட்டம் சோமனூர் அருகில் உள்ள‘செகடந்தாளி’என்ற கிராமத்தில் பழனிச்சாமி-பழனியம்மாள் தம்பதியினருக்கு மகனாக பிறந்தார். அவர் பூசாகோ கலை அறிவியல் கல்லூரியில் முதுகலை படிப்பு முடித்துள்ளார். இவரது மனைவி சுகந்தி இவர்களுக்கு ஸ்ரீமுகி மற்றும் சுபமுகி என்ற இரண்டு மகள்கள். இவர் கல்லூரி நாட்களிலேயே கதை எழுதினாலும் ஹைதராபாத்தில் பி.எஸ்.என்.எல்-லில் பணிபுரியும் போதுதான் தீவிரமாக எழுதியதாக கூறியுள்ளார். இவர் புதினங்கள், சிறுகதை தொகுப்புகள் குறுநாவல், கட்டுரைத்தொகுதி, நாடகம், சினிமா என்று பல துறைகளிலும் தடம் பதித்துள்ளார். இவர் கதைகள் பல ஆங்கிலம், ஹங்கேரி போன்ற அந்நிய மொழிகளிலும், மலையாளம், தெலுங்கு கொங்கனி, இந்தி, மராத்தி போன்ற இந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. குறிப்பாக இவர் புதினங்களில் சாயத்திரை‘‘The Coloured Curtain’ என்று ஆங்கிலத்திலும், ரங் ரங்கீலிசாதர்மைலி என்று இந்தி மொழியிலும், தேநீர் இடைவேளையை ஆங்கிலத்தில் ‘The Un Written Letters’ என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவர் இந்திய ஜனாதிபதி வழங்கிய ‘கதா’பரிசு, தமிழக அரசின் சிறந்த நாவலுக்கான பரிசு உள்பட ஏராளமான பரிசுகள் பெற்றுள்ளார். இவர் திருப்பூரின் உண்மை நிலையினை உள்ளது உள்ளவாறு கதாபாத்திரங்கள் மூலம் வெளிக் கொண்டு வருவதுதான் இவர் நூல்கள் பல புகழ்பெற காரணம் ஆகும். இவர் நூல்களில் பல திருப்பூரை மையமாக கொண்டே எழுதப் பெற்றுள்ளன அவற்றில் சிலநூல்கள்

1. பெண் தொழிலாளர்கள் பற்றி சமயலறைக் கலயங்களிலும்
2. குழந்தைதொழிலாளர்கள் பற்றி பிணங்களின் முகங்களிலும்
3. புலம் பெயர் தொழிலாளர்கள் பற்றி தேநீர் இடைவேளையிலும்
4. வெளிநாட்டார் வருகையால் திருப்பூரின் நிலை நைராவிலும்

5. நெசவாளர்கள் பற்றி தறி நாடாவிலும் காணப்படுகின்றன. இவை அனைத்தும் திருப்பூரை மையமிட்ட நூல்களாகவே உள்ளன. இவற்றைப் அதில் உள்ள சிக்கல்கள் சில

**பெண் தொழிலாளர்கள்**

பெண்கள் குடும்பச் சூழ்நிலை காரணமாகவும், பல்வேறு காரணங்களுக்காகவும் வேலை செய்ய வருகின்றனர். திருப்பூர் போன்ற நகரங்களில் பணியிடங்களில் ஆரம்பத்தில் ஒருவாரம் வேலை செய்தாலும், அதற்கான ஊதியம் தரப்படுவதில்லை என்பதை‘சமயலறைக் கலயங்கள’;புதினத்தில் சுட்டிக்காட்டுகிறார். அதில் ஒருசில வரிகள்

***“முதல் சம்பளத்தை வாங்கும் போது நெகிழ்ச்சியாக இருந்தது. சம்பளப் பணத்தைப் பத்துரூபாய் நோட்டாகக் கொடுத்திருந்தார்கள். கைநிறையப் பணம் வந்துவிட்ட மாதிரி இருந்தது. பெரும்பான்மையான நோட்டுகள் சற்றே அழுக்கடைந்திருந்தன”1.***

என்று சாந்தாவின் நிலையை குறிப்பிடுகிறார். இவை மட்டுமல்லாது பெண் தொழிலாளர்கள் மனரீதியாகவும் துன்புறுத்தப்படுவது இவரது புதினங்களில் இடம் பெறுகின்றன.

**குழந்தைதொழிலாளர்கள்**

சின்னஞ்சிறுவயதில் வருமானம் ஈட்டவேண்டிய கட்டாயத்திற்குக் குழந்தைகள் தள்ளப்படுவதற்கு வறுமையே முதன்மைக் காரணம் என்று பிணங்களின் முகங்கள் புதினத்தில் சுப்ரபாரதிமணியன் பதிவிட்டுள்ளார். இதனை,

***“குழந்தைத் தொழிலாளர்கள் மலிவான கூலிக்கு அடிமைப்படுத்தப்படுகிறார்கள்”2***

என்று கூறுகிறார்.மேலும் அவர்கள் பள்ளிக்குள் செல்லாமல் வீட்டு வேலைகளிலும், பனியன் நிறுவனங்களிலும், ஈடுபடுத்தப்படுவது இவரது பிணங்களின் முகங்கள், நைரா, புதினங்களில் இடம் பெறுகின்றன.

**புலம் பெயர் தொழிலாளர்கள்**

புலம் பெயர் பெற்றவர்களை ‘குடிபெயர்ந்தவர்கள் அல்லது‘அகதிகள்’என இருவகைப்படுத்தலாம். புலம் பெயர்ந்தோர் புது மண்ணில் எண்ணிலடங்கா இன்னல்களை

*எதிர் நோக்குகின்றனர். அதில் ஒன்று இருப்பிடம். தேநீர் இடைவேளை என்னும் புதினத்தில் பெண்கள், ஆண்களில் வேலையில்லா பட்டதாரி, வயதானவர்கள் படும் வேதனைகளை சுப்ரபாரதிமணியன்; குறிப்பிடுகிறார். அதில் ஒன்று*

***"இரண்டு குளியலறைகள் இரண்டு கழிப்பறைகள் சிலசமயங்களில் வரிசை (Queue) ஏற்பட்டுவிடுகிறது வேலைக்கு போகிறவர்கருக்கு முன்னுரிமை பெண்கள் எல்லாம் மத்தியான வேளைகளில் கியூவில் நிற்கிறார்கள். போரிங் பைப்புகளில் தண்ணீர் அடிப்பதற்கும் கியூவில் நிற்க வேண்டியிருக்கிறது"3.***

*என்று மல்லிகா தன் இருப்பிட சூழலைதன் சித்தப்பாவிற்கு கடிதம் மூலம் தெரிவிப்பதாக உள்ளன. மேலும் புலம்பெயர் தொழிலாளர்கள் உயிருக்கு பாதுகாப்பின்மையும் பற்றி நைரா புதினத்தில் கூறியுள்ளார்.*

**வெளிநாட்டார் வருகை**

*திருப்பூரில் நைஜுரிய இனமக்கள் பனியன் தொழிற்சாலைகள் ஒருபுறமிருந்தாலும் இவர்கள் தங்கள் நாட்டின் துணிகளை கொண்டுவந்து விற்பது வழக்கம். அதில் வரும் இலாபத்தில் தங்கள் நாடுசெல்லும்போது இங்கிருக்கும் பனியன்களை எடுத்துசெல்வது வழக்கம் அதில் ஒருவரி,*

***"விசாமுடியறப்போகொஞ்சம் பனியன்களெகூட கொண்டுபோவம் கப்பலியும்"4***

*என்று அகல்யாவிடம் கெலிச்சி என்ற நைஜுரிய இளைஞன் கூறுவதாக உள்ளது. இவ்வாறு வெளிநாட்டார் வருகையால் பெண்களுக்கு பாதுகாப்பின்மை, கலாச்சார சீர்கேடு போன்றவை ஏற்படுவதாக நைரா புதினத்தில் தன் கருத்தைப் பதிவிட்டுள்ளார்.*

**நெசவாளர்கள்**

*திருப்பூர் நகரில் பனியன் தொழிற்சாலைகள் ஆக்ரமித்திருந்தாலும் நெசவுத் தொழில் வீட்டுக்குவீடு இருந்துகொண்டுதான் இருக்கிறது. சுப்ரபாரதிமணியன் அவர்களில் தறிநாடா,சப்பரம் போன்ற புதினங்கள் நெசவாளர்களின் வறுமை நிலையினை கூறக்கூடிய நூல்களாக உள்ளன. அதில் ஒரு சில வரிகள்*

***"சீராய் தறிச்சப்தம் கேட்டது. மனசுள் மெல்லிசான மாதிரி ஆரம்பிக்கும் சப்தம் வந்தது"5;*** *இதனால் திருப்பூர் நகர நெசவுத்தொழில் பெருகி உள்ளதையும் காணமுடிகிறது.*

இதன் மூலம் தொழில் பெருகியுள்ள நிலையில் குறைந்த வருமானம் ஈட்ட வேண்டிய சூழல் உள்ளது.

**நொய்யல்**

1990-களில் நொய்யலில் ஒரத்துப்பாளையம் தடுப்பணைகட்டப்பட்டது. திருப்பூர் பின்னலாடைத் தொழிற்சாலைகளிலிருந்து திறந்து விடப்படும் சாயக்கழிவுநீர் நொய்யலைப் பாழ்படுத்திவிட்டது. ஆடுமாடுகள் அந்த நதியை அண்டுவதற்குத் தயங்குகின்றன. வேதி ஆலைகளின் கழிவுநீர், நொய்யல் கரையின் நிலத்தடி நீரைமீட்டெடுக்க முடியாத அளவுக்குப் பாழ்படுத்திவிட்டது. குடிநீருக்கு எப்போதாவது வரும் காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டக் குழாய்களை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். மற்ற நாட்களில்,

***"ஊராட்சி நிர்வாகத்தால் திறந்துவிடப்படும் ஆழக் குழாய்க் கிணறுகளின் துவர்ப்பச் சுவையள்ள தண்ணீர் குளிப்பதற்கும், துவைப்தற்கும், பாத்திரம் பண்;டங்களை கழுவதற்கும் அந்தத் தண்ணீர்தான் கைகொடுக்கிறது"6.***

சுப்ரபாரதிமணியன் நொய்யலின் நிலையை சாயத்திரையிலும் திருப்பூர் சுற்றுச்சூழல் எவ்வாறுசீர் அழிந்துள்ளது என்பதனை தனது திருப்பூர் பற்றி கூறும் அனைத்துப் புதினங்களிலும் தெளிவாக கூறியுள்ளார். மேலும், "சுமங்கலி திட்டத்தால்" பெண்களின் உழைப்பைச் சுரண்டுதல், பெண்களுக்கு பாதுகாப்பின்மை என்று பல பிரச்சனைகளை நம் முன் கொண்டு வருகிறார்.

**தொகுப்புரை**

இவ்வாறாக திருப்பூர் நகரத்தின் மீது பற்றுக் கொண்டுள்ள சுப்ரபாரதிமணியனின் படைப்புகளின் வழி திருப்பூர் பனியன் நிறுவனங்களில் பெண்கள் குழந்தைகள் குறைந்த கூலிக்கு வேலைக்கு அமர்த்துதல், புலம்பெயர் தொழிலாளர்களின் அடிப்படை பிரச்சனைகள், நைஜுரியர் வருகையால் கலாச்சார சீர்கேடு, நெசவுத்தொழில் பெருக்கத்தினால் குறைந்த வருமானம் நொய்யல் மாசு அடைந்துள்ளதை தன் படைப்புகளில் உணர்த்துகிறார். இதன் மூலம் திருப்பூர் மீது சுப்ரபாரதிமணியன் கொண்டுள்ள அக்கரை புலனாகிறது.

**சான்றெண்; விளக்கம்**

1. சமையலறைக் கலயங்கள், சுப்ரபாரதிமணியன் ப-49

2. படைப்புமனம், சுப்ரபாரதிமணியன், ப-120.

3. தேநீர் இடைவேளை, சுப்ரபாரதிமணியன் ப-4

4. நைரா, சுப்ரபாரதிமணியன் ப-66

5. தறிநாடா, சுப்ரபாரதிமணியன் ப.4

6. இந்து தமிழ் -தீபாவளிமலர் - 2019, ப-162

**துணை நூற்பட்டியல்**


1. சுப்ரபாரதிமணியன் நாவல்கள் சமயலறைக் கலயங்கள், தேநீர் இடைவேளை, நைரா, தறிநாடா, பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட், 16 (142), ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை சென்னை-14.

2. இந்து தமிழ்-தீபாவளி மலர் - 2019 ப.162.